# 8.

# எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் மதச்சார்பின்மை அரசியலும்

*கணபதிப்பிள்ளை தங்கராஜா கணேசலிங்கம்* [1]

## அறிமுகம்

காலத்துக்குக் காலம் பலவாறான சிந்தனை ஆதிக்கங்கள், அரசுகளின் அரசியல் இயங்கியலை முதன்மைப்படுத்தியும் நெறிப்படுத்தியும் வந்துள்ளன. முதலாளித்துவம், சோசலிசம் மற்றும் தாராண்மைவாதம் என்பன அத்தகைய நெறிப்படுத்தலை மேற்கொண்ட சிந்தனையாதிக்கங்களில் முதன்மையானவை. இவ்வாறானதொரு மரபுக்குள்ளேயே 'மதச்சார்பின்மை' (Secularism) பற்றிய உரையாடல்களும் அரசறிவியல் கோட்பாட்டாளர்களின் தலைமையில் இடம்பெறுகின்றன. 'மதத்தினை அரசியல் மயமாக்குதல்' (Politicization) என்ற கருத்தியலுக்கு நேரெதிரான ஒன்றாக 'மதச்சார்பின்மை' என்ற கருத்தாடலானது எழுச்சி அடைந்தது. கல்விசார் கருத்தாடல்களில் மதச்சார்பின்மை என்பது மதச்சார்பின்மைவாதம் என்ற பதத்தினாலும் பயன்படுத்தப்படுகிறது. மதச்சார்பின்மை என்ற கருத்தை எதிர்கொள்வது என்பது மதச்சார்புக்கு முரணாக வைக்கப்பட்டு, புரிந்துகொள்ளப்படும் ஒரு கருத்தின் அடிப்படையாக அமைகின்றது. மதத்தினை அரசியல் மயமாக்குதல் என்பது, பல நாடுகளிலும் அவதானிக்கக்

[1] யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறையின் தலைவராகப் பணியாற்றும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை தங்கராஜா கணேசலிங்கம், இந்தியாவின் பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் “அரசியல் மற்றும் சர்வதேச ஆய்வுகள்“ துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவராவார். இவர் சர்வதேச உறவுகள் மற்றும் புவிசார் அரசியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கூடியதொரு விடயமாகும். இது பயங்கரவாதம், அடிப்படைவாதம் மற்றும் வன்முறை ஆகியவற்றுடன் நெருங்கிய வகையில் தொடர்பு உடையது. ஆரம்பகால முடியாட்சி மரபுகளில், அரசு என்ற அமைப்புக்கும் மதத்திற்குமிடையிலான பிணைப்பு வலுவானதாகக் கட்டமைக்கப்பட்டு இருந்தது. அந்தப் பிணைப்பு தற்போது படிப் படியாக வளர்ச்சிபெற்று சனநாயகக் கருத்தியலோடு இசைவாக்கம் பெற்றதாக மாறியுள்ளது. ஆட்சியாளர்களும் மக்களும் மதத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையின் காரணமாக மதச்சார்பு கொண்ட அரசாங்கங்களின் இருப்பினை சாத்தியமாக்குகின்றனர்.

தென்பூகோள நாடுகளின் மக்கள், மத நம்பிக்கைக்குள் அகப்பட்டுள்ளதனால் அந்நாடுகளிலுள்ள அரசியல் நிறுவனங்கள் கூட மக்களது ஆதரவைத்திரட்ட மதத்தினை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றன. இதனை மேற்குலகத்தவர் கீழைத்தேச நாடுகளைக் கைப்பற்றும்போது மேற்கொண்டிருந்தனர். அதன் பின்னரான காலத்தில், அவர்கள் மதத்தைப் பரப்பி அதன் பெயரால் ஆட்சியை ஸ்தாபிப்பதிலும் கவனங்கொண்டிருந்தார்கள். இதன் நீட்சியாக அரசுகளின் ஆட்சியமைப்பில் மதத்தின் பங்கேற்பு இடம்பெறலாயிற்று. அரசியல் கட்சிகளினதும் உயர் குழாத்தினதும் மேலாதிக்கத்தை நிறுவுதல், கலாசாரத்தை ஒருங்கிணைத்தல் மற்றும் தேசியவாதத்தை மறுவரையறை செய்தல் போன்றவற்றில் மதமானது பலமாகச் செல்வாக்குச் செலுத்துகின்றது. அமெரிக்க அறிஞரான சாமுவேல் பி. ஹன்டிங்டன் (Samuel P. Huntington) தனது ஆய்வில், பனிப்போருக்குப் பின்னரான அரசியலை மதம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட நாகரிகங்களின் மோதுகையாகவே அடையாளப்படுத்துகின்றார். இவரது கருத்தானது, அரசியலில் மதத்தினது நடைமுறை ஆதிக்கத்தினை வலியுறுத்துவதாக உள்ளது. மேலும், ஐரோப்பா முழுவதும் பல நூற்றாண்டுகளாக யூதர்கள் பாரபட்சத்தினை எதிர்கொண்டாலும், தற்போதைய இஸ்ரேலில் யூதக் குடி மக்களுக்குக் கிடைக்கும் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நன்மைகளிலிருந்து இதர மதப் பிரிவினரான அரபுக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் விலக்கப்பட்டு உள்ளனர். ஐரோப்பாவின் பல பகுதிகளில் கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு எதிரான நுட்பமான பாரபட்சம் தொடர்ந்தும் நீடிக்கிறது. தென்னாசிய நாடுகளிலும் மத சிறுபான்மையினரின் நிலையானது தொடர்ச்சியான வகையில் ஆதிக்கம் பொருந்திய மதங்களினது

அடக்குமுறைக்காளாகியுள்ளது. இன்றைய உலகில் மதத்தினது பொதுவான வெளிப்படுதன்மையும், அது அரசியல் மயமாதலுக்களாகியுள்ளமையும் மதச்சார்பற்ற சமூகமொன்றினை உருவாக்க வேண்டியதன் தேவைப்பாட்டினை ஏற்படுத்தியுள்ளது. இதுவே, அரசியல் ஒழுங்கில் 'மதச்சார்பின்மை' பற்றியதொரு சிந்தனையினைப் புலமையாளர் மத்தியில் ஏற்படுத்தியதோடு, அது தொடர்பான ஆய்வுகளை அவர்கள் முன்னெடுக்கவும் வழி சமைத்துள்ளது.

மதச்சார்பின்மை என்பது ஓர் அரசியல் எண்ணக்கருவாக, ஏனைய எண்ணக்கருக்கள் போன்று மேற்குலகத்திலேயே பரிணமித்ததொன்றாகும். குறிப்பாக, மேற்கத்தேய நாடுகளின் அரசியலில் நிலவிய திருச்சபைகளின் ஆதிக்கத்திற்கெதிராக 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் மேலெழுந்த அறிவொளியின் தாக்கமானது, மதச்சார்பின்மை தொடர்பான தேடலை ஊக்கு வித்தது. எனினும், அறிவொளியின் தோற்றமானது பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் ஜோன் லொக், தோமஸ் ஹொப்ஸ் போன்ற அறிஞர்களால் நிறுவப்பட்ட அறிவுப் புலத்தின் அடிப்படையில், முழுப்பிரபஞ்சம் தொடர்பான சித்திரத்தை உருவாக்குவதற்கான முயற்சியை பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், மதச்சார்பின்மையினை முக்கியத்துவப்படுத்தும் சிந்தனையையும் அது கட்டமைத்தது. இந்த எண்ணங்களின் அடிப்படையிலேயே மதச்சார்பின்மை பற்றிய சித்தாந்தத்திற்கான அறிவொளி யுகத்தின் பங்களிப்பும் அமைகிறது. இவ்வாறாக, அறிவொளியினை மையப்படுத்திய சிந்தனையாளர்கள் இறைமைக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசை புனரமைக்கவும் தேசத்தை உருவாக்கவும் முனைந்தபோது மேலாதிக்கத்தின் எச்சமான திருச்சபையின் அரசியல் ஆதிக்கமும் முடிவுக்கு வந்தது. இதன் தொடர்ச்சியாக, பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரட்றிக் ஹெகல் (Friedrich Hegel) மற்றும் இம்மானுவேல் காண்ட் (Immanuel Kant) ஆகிய இரு அறிஞர்களும், அறிவொளிக்கால சிந்தனையினை ஆதரித்து இருந்தனர். அதுமட்டுமல்லாது, அவர்கள் இருவரும் மேம்பட்ட பகுத்தறிவுவாதத்திற்கும் வழிவகுத்தனர். இவர்களுடைய பகுத்தறிவுவாதச் சிந்தனைகள் மறுக்கமுடியாத உண்மையென அரசியல் அதிகார நிறுவனங்கள் ஏற்றுக் கொண்டன. இதனைக் கட்டமைத்த அரசியல் நிறுவனங்கள் தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் இறையியல் சிந்தனைகளைப் பெருமளவில்

மட்டுப்படுத்தின. மேலும், ஜெரமி பெந்தம் (Jeremy Bentham) எனும் பயனுடமைவாத சிந்தனையாளரும் மதச்சார்பின்மையென்ற கருத்தை ஊக்குவிப்பவராக இருந்தார். இவை அனைத்தும் மதச்சார்பின்மை என்ற விடயம் நிலைநிறுத்தப்படுவதற்கான சூழலை அனுமதித்தன.

'மதச்சார்பின்மை' என்ற பதமானது, 20ஆம் நூற்றாண்டில் ஜோர்ஜ் ஜேக்கப் ஹோலியோக் (George Jacob Holyoake) என்ற பிரிட்டிஷ் சமூக சீர்திருத்தவாதியின் நூல்களில் வெளிப்பட்டன. மத்திய காலத்தில் நிரம்பியிருந்த மதச் செல்வாக்கானது தொடர்ச்சியாக மறுமலர்ச்சிக்கால ஐரோப்பிய அரசியலில் 'திருச்சபைகள் தொடர்பிலான வாதங்களாக' காணப் பட்டது. மத நம்பிக்கையென்ற வடிவத்தின் ஊடாக, அரசின் இயங்கியலுக்குள் திருச்சபைகளின் ஆதிக்கம் ஏதோவொரு வகையில் ஐரோப்பிய அரசியலில் தவிர்க்க இயலாதவாறு நிலைத் திருந்தது. மதத்தின் பொதுத்தோற்றமானது, மதச்சார்பின்மை, நீதி, சமத்துவம் மற்றும் தாராளவாத சமூகம் போன்றவற்றுக்கான சாத்தியங்களைச் சிதைத்தது. அத்துடன் வலுவான மேற்கத்திய நவீனமயமாக்கத் தத்துவத்தின் உலகளாவிய கொள்கைகளை மறுபரிசீலனைக்கும் அது உட்படுத்தியது. குறிப்பாக மதச்சார்பின்மை, நவீனத்துவம், நவீனமயமாக்கல், தேசியவாதம் முதலானவற்றின் நெறிமுறைப் புரிதலிலிருந்து ஒரு விலகலாகவே அரசியல் மயமாதலுக்குட்பட்ட மதம் அமைகின்றது. இந்த அரசியல் மயமாதலுக்குட்பட்ட மதத்திற்கெதிராக மேற்குலகில் வலுப்பெற்ற மதச்சார்பின்மை சித்தாந்தமானது, அதற்கு வெளியே பல பரிமாணங்களுடன் பயணிக்க முற்பட்டுள்ளது. தற்போது மேற்கிலிருந்து மேற்கத்திய நாடுகள் அல்லாத சமூகங்களுக்கு அது விஸ்தரிக்கப்படும் போது மதச்சார்பின்மை பற்றிய யோசனைகளும் சிந்தனைகளும் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதை சமூக விஞ்ஞானிகள் விரிவாக ஆய்வுசெய்யத் தொடங்கியுள்ளனர்.

### மதச்சார்பின்மை : ஓர் எண்ணக்கரு ரீதியான புரிதல்

'மதச்சார்பின்மை' என்ற சொல்லானது மத நம்பிக்கையுடன் தொடர்புடையதல்ல. சமகால உலகில் மதச்சார்பின்மையென்ற விடயம் அரசியலமைப்பு ரீதியாகப் பல அரசுகளில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. அங்கு அதிகாரத்தை நியாயப்படுத்த 'மதச்சார்பின்மை' என்ற விடயம் பயன்படுத்தப்படுகிறது. எனினும், இந்த

நாடுகளின் அரசியலமைப்புகளில் 'மதம்' நிராகரிக்கப்படாது ஏதோவொரு வகையில் உள்வாங்கப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது. 'மதம் அரசியலில் இருக்கமுடியாது' என்பதே மதச்சார்பின்மை என்பதன் மேற்குலகப் புரிதலாகும். எனினும், வாழ்க்கை முறையில் மதம் ஒரு தனித்துவமான இடத்தைக்கொண்டுள்ளது. சகல மதங்களும் இயங்கியல் தன்மை கொண்டவை. இதனாலேயே, மதம் என்பது உணர்வு நிலையுடன் தொடர்புடையதாக அமைகிறது. சுருங்கக் கூறுவதானால் மதச்சார்பற்ற சமூகங்களில் கூட (மதங்களை நியாயப்படுத்தாமல்) மதச் செல்வாக்குக்குட்பட்ட அரசியல் பங்கேற்பு இடம்பெறுகின்றது.

1851இல் ஜோர்ஜ் ஹோலியோக் தன்னையும் தன்னைப் பின்பற்றுபவர்களையும் விவரிக்க 'மதச்சார்பின்மை' என்ற பதத்தினைப் பயன்படுத்தியிருந்தமையைக் காணலாம் (Zuckerman & Shook 2017). குறிப்பாக, தனிப்பட்ட ஒழுக்கங்கள், தத்துவம், சமூகம் மற்றும் அரசியலுக்கான அவரது உலக அணுகு முறையை விவரிக்க 'மதச்சார்பின்மை' என்ற பதத்தினை அவர் அடையாளப்படுத்தினார். இறையியலை காலவரையறையற்றது அல்லது தகுதியற்றது, நம்பத்தகாதது அல்லது நம்பமுடியாதது எனக் கருதுகின்ற மனிதர்களைக் கருத்திற்கொண்டு, இவ்வுலக வாழ்க்கையுடன் தொடர்புடைய கடமைகளின் நெறிமுறைத் தொகுப்பே மதச்சார்பின்மையென ஹோலியோக் வரையறுத்தார் (In Zuckerman & Shook, 2017, p. 4). ஹோலியோக் இந்தப் பதத்தினை நாத்திகத்தினைவிட வேறுவிதமாக நோக்கியிருந்தார். அதாவது, மதத்தை மறுதலிப்பதிலிருந்து வேறுபட்டு, வாழ்க்கை தொடர்பான நெறிமுறைக்குள் மதத்தை விலக்கி, மதச்சார்பின்மை என்ற விடயத்தினை அணுகியிருந்தார். இம்மரபிலிருந்தே நவீன அரசு பற்றிய சிந்தனைக்குள் 'மதச்சார்பின்மை' என்ற விடயம் முதன்மையான வடிவத்தை பெறவருகிறது.

'மதச்சார்பின்மை' என்ற பதமானது 'சயுகுலும்' (Saeculum) என்ற இலத்தீன் பதத்திலிருந்து பெறப்பட்டதாகும். 'Saeculum' என்பதன் பொருள் ஒரு 'தலைமுறை' அல்லது 'ஆயுட் காலம்' என்ற கருத்தினை வெளிப்படுத்துகிறது. பிற்பட்ட காலங்களில், மதச்சார் பின்மை என்ற பதமானது உள்ளார்ந்த தன்மையை உறுதிப் படுத்துதல், உலக உண்மைகள், சூழ்நிலை மற்றும் பிற உலக யதார்த்தங்களின் மறுப்பு அல்லது விலக்குதல் போன்ற பொருள் அர்த்தங்களில் விளங்கிக்கொள்ளப்பட்டது. அதாவது, மதச்சார்

பின்மை என்பது தனிநபர் மற்றும் சமூக வாழ்க்கைக்கான மதமற்ற அணுகு முறையென்ற பொருளில் விளங்கிக்கொள்ளப்பட்டது. எனினும், 1965இல் ஹார்வி ஹொக்ஸ் (Harvey Cox) அவர்கள் தனது 'மதச்சார்பின்மை நகரம்: இறையியல் பார்வையில் மதச்சார்பின்மையாதலும் நகரமயமாதலும்' (The secular city: Secularization and urbanization in theological perspective) என்ற நூலில் மதச்சார்பின்மையாதல் (Secularization) மற்றும் மதச்சார்பின்மை ஆகிய இரண்டு பதங்கள் குறித்து விளக்கங்களை முன்வைத்து, அவற்றினை வேறுபடுத்த முற்படுவதனைக் காணமுடிகிறது. இந்நூலில், மதச்சார்பின்மையாதலுக்கான அடிப்படையினை ஹொக்ஸ் பைபிள் சார்ந்த நம்பிக்கையுடன் தொடர்புபடுத்துகிறார். விடுதலையை அடைந்துகொள்வதனை இலக்காகக் கொண்ட ஒரு விடயமாக மதச்சார்பின்மையாதலைக் கருதும் ஹொக்ஸ், அது படிப்படியாக விருத்தி நிலையினை அடையுமென்றும் அதனது ஆரம்ப கட்டத்துக்கு மீண்டும் பயணிக்க முடியாதெனவும் அவர் குறிப்பிடுகிறார். மதச்சார்பின்மைவாதத்தினை ஆதரிக்கும் ஹார்வி ஹொக்ஸ், மதச்சார்பின்மை குறித்து எதிரானதொரு நிலைப் பாட்டினைக் கொண்டுள்ளார். இன்றைய நகரமயமாக்கப்பட்ட சூழலில் தவிர்க்கமுடியாத ஒன்றாக மதச்சார்பின்மை மாறியுள்ள தாகக் குறிப்பிடும் ஹொக்ஸ் அவர்கள், அதனை ஒரு மூடிய கருத்தியலாக அடையாளப்படுத்துகிறார் (Cox, 1965, p.25-26). மதச் சார்பின்மையானது, உலகம் பற்றிய மூடியதொரு பார்வையினைக் கொண்டிருப்பதாகவும் அது ஒரு புதிய சமயம் போன்று தொழிற்படுவதாகவும், ஏனைய 'கருத்தியல்சார் வாதங்கள்' போன்று 'மதச்சார்பின்மை' வெளிப்படைத்தன்மை மற்றும் சுதந்திரம் (மதச்சார்பின்மையாதல் விருத்தி செய்த) போன்றவற்றுக்கு அச்சுறுத்தலாக அமைவதாகவும் ஹொக்ஸ் குறிப்பிடுகிறார். உண்மையில் ஹொக்ஸ் மதச்சார்பின்மை என்பதனை விமர்சிக்கும் ஒருவராகக் காணப்படும் அதேவேளை, ஒரு கருத்தியலாக அரசு என்ற கருவியினூடாக அது திணிக்கப்படுவதனைத் தடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டுகிறார்.

### நவீன அரசுகளின் அரசியலமைப்புகளில் மதச்சார்பின்மை

மதச்சார்பின்மை பற்றிக் கலந்துரையாடும்போது, மதமென்ற விடயம் குறித்து கவனங்கொள்ள நேரிடுகிறது. பொதுவாக, மதம் என்பது கலாசார விழுமியங்களுடன் தொடர்புடையது. பிராந்திய

கலாசார வேறுபாடுகளைக் கொண்டது. எனவே, மதச்சார்பின்மை பற்றிக் கலந்துரையாடும்போது, வரையறைகளும் உள்ளீடுகளும் ஒரு நிலையான தன்மையைப் பெறமுடியாத சூழல் காணப் படுகிறது. குறிப்பாக, மேற்கத்தேய மதச்சார்பின்மை தொடர்பான வாதங்களை அவதானிக்கும்போது, அவை கீழைத்தேய நடை முறைகளோடு பெரிதும் முரண்படும் நிலையைக் கொண்டுள்ளன. மேற்கத்தேய அரசியல் மரபில் மதச்சார்பின்மை என்பது இயற்கைக்கும் அப்பாற்பட்டதொரு வடிவமாகும். குறிப்பாக, மதம், மதச்சார்பின்மை என்பன சுயாதீனத் தன்மை கொண்டவையென மேற்கத்தேய அரசியல் மரபு விளக்கியுள்ளது. எனவே, மேற்கத்தேய அரசியல் மரபில் இடம்பெறும் மதச்சார்பின்மை தொடர்பான கருத்தானது 'மத நிராகரிப்பினை' வலியுறுத்துகிறது. அத்தோடு, மதச்சார்பின்மையென்பது ஆன்மீக விடயங்களிலிருந்து வேறுபட்டதேயன்றி அதனுடன் தொடர்புடையதல்ல என்பதையும் அம்மரபு சுட்டிக்காட்டுகின்றது. ஐரோப்பாவில் மதச்சார்பின்மை என்ற சொல்லானது மதத்தின் அச்சுறுத்தலை வெளிப்படுத்துகிறது. மதச்சார்பின்மையின் நோக்கம், மதத்தினது கொடுங்கோன்மையில் இருந்து விடுதலை பெறுவதாகும். அந்த அடிப்படையில், மேற்கத்தேய மதச்சார்பின்மையின் அரசியலமைப்பு ரீதியான நடைமுறையாக்கத்தின் ஆரம்பத்தினைப் பிரான்சில் அவதானிக்க முடிகிறது.

1905ஆம் ஆண்டில் பிரெஞ்சு அரசாங்கமானது முதன் முதலாக திருச்சபைகளையும் அரசையும் பிரிக்க வேண்டுமென்ற சட்டத்தை இயற்றியது. இதனால், மதச்சார்பின்மை என்பது ஒரு தேசிய கொள்கையாக பரிணமித்தது. மதக் குழுக்களை அதிகாரபூர்வமாக அங்கீகரித்தல், அவற்றுக்கு நிதியளித்தல் அல்லது ஒப்புதல் அளித்தல் என்பவற்றை அரசு தடைசெய்தது. இது பிரான்சு நாட்டினது திருச்சபை - அரசு உறவில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஐரோப்பிய நாடுகளில் அதிகமானவை கிறிஸ்தவ மதத்தினது ஆளுகைக்கு உட்பட்டவையாகக் காணப்பட்டன. அதனால், கிறிஸ்தவ மதத்தினை அரசியலிலிருந்து முழுமையாக நீக்கம் செய்ய வேண்டுமென்ற கருத்து வலிமையான நிலையை அடையப் பெற்றது. எனினும், அக்கால ஐரோப்பாவில் ஏனைய மதங்களினது எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. மதங்கள் முழுமையான வகையில் அரசு விலக்குதலை எதிர்கொள்வதனால், சிறுபான்மை மதங்கள் சில நெருக்கடிகளை எதிர்கொண்டன. இதனால், சமீபத்தில் பிரெஞ்சு சமுதாயத்தில் முஸ்லிம் மற்றும் பிற மதச் சிறுபான்மைக்

குழுக்களின் ஒருங்கிணைப்புத் தொடர்பாக அதிக அக்கறை ஒன்று ஏற்பட்டுள்ளதோடு, அவை ஆய்வுக்குரிய விடயப் பொருளாகவும் மாறியுள்ளன.

கீழைத்தேய மதச்சார்பின்மை வடிவத்தின் பிரதிபலிப்பாக, இந்தியாவின் மதச்சார்பின்மை என்ற கருத்தியல் முதன்மை பெறுகின்றது. அயல் நாடான இந்தியா 'மதச்சார்பின்மை நாடு' என்ற அடையாளத்தைக் கொண்டுள்ளபோதும் ஆரம்பத்திலிருந்து மத அரசியல் நிலவிய நாடாகவே அதனை அடையாளப்படுத்த முடிகிறது. குறிப்பாக, இந்தியாவில் கருத்தியலாலும் தத்துவ சிந்தனையாலும் உந்தப்பட்ட மத இயக்கங்கள் பல தோன்றி உள்ளன. இந்திய வரலாற்றில், மதத்தைப் பரப்பும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட ஐந்து முக்கிய இயக்கங்களை இங்கு அடையாளப்படுத்த முடியும்: இந்தோ - ஆரிய மத அமைப்பு, பௌத்த - ஜைன மத அமைப்பு, பக்தி இயக்கம், இஸ்லாமிய மத இயக்கம் மற்றும் கிறிஸ்தவ மத இயக்கம். அரசியலிலிருந்து மதத்தினை பிரித்தெடுத்தல் குறித்து மட்டும் இந்தியா கருத்திற் கொள்ளவில்லை. மாறாக, மதங்களுக்கு இடையேயான சமத்துவம் பற்றிய கருத்துருவாக்கத்திற்கும் அது முக்கியமளித்துள்ளது. இந்தியாவின் தந்தையென அழைக்கப்படும் மகாத்மா காந்தி, மதங்கள் தொடர்பான இந்திய அரசின் நிலைப்பாட்டைப் பற்றி 'புதிய இந்தியா' என்ற சஞ்சிகையில் குறிப்பிடும்போது “இந்திய நாட்டில் மதமென்பது இந்து மதத்தினை மட்டும் குறிக்கும் ஒன்றல்ல. இந்தியாவில் மதமென்பது இந்து மதத்தினை வேறு மட்டத்துக்குக் கொண்டுசென்று ஒவ்வொருவரது இயல்பினையும் மாற்றுகின்றதொன்றாகும். இதுவே ஒருவரை உண்மையோடு பிணைத்து அவரைத் தூய்மைப்படுத்தும் ஒன்றாகும்” எனக் குறிப்பிட்டிருந்தார் (Singh & Singh 2004, p.105).

இந்தியாவில், ஒரு மதம் மாத்திரம் வளர்க்கப்பட வேண்டும் என காந்தி வலியுறுத்தவில்லை. ஆனால், மதம் இல்லாமல் மனிதனால் வாழமுடியாதென அவர் வலியுறுத்தினார். அதாவது, ஒரு மனிதன் முழு இந்துவாகவோ முழு கிறிஸ்தவனாகவோ முழு முஸ்லிமாகவோ இருக்கமுடியும் எனக் குறிப்பிட்டார். மதமில்லாத மனிதனது இருப்பானது, மூக்கில்லாமல் அவன் சுவாசிப்பதனை ஒத்ததாகும் எனவும் மகாத்மா காந்தி குறிப்பிட்டமையினைக் காணலாம். அத்தோடு, மனிதர்கள் வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும்கூட, அவர்கள் சகிப்புத் தன்மையுடன் இருக்கவேண்டும் என்றும் சகல மதங்களும்

ஒன்றோடொன்று இணைந்து செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தும் ஒருவராகவே காந்தியை அடையாளப்படுத்த முடிகிறது (Singh & Singh 2004, p.105).

இந்தியாவில், மதச்சார்பின்மை என்ற கொள்கையானது சகல மதத்தினருக்கும் அரசின் சம பாதுகாப்பினை உறுதிப் படுத்தல் என்ற அர்த்தத்தினைப் பிரதிபலிக்க வேண்டுமென ஜவகர்லால் நேரு அவர்களும் வலியுறுத்தியமையைக் காணலாம். அதன் பிரகாரம், அரசு சகல மதங்களையும் பாதுகாக்கின்ற ஒரு மதச்சார்பற்ற அரசாக இருக்கவேண்டுமென்ற கருத்து முன்னிலைப் படுத்தப்பட்டது. எனினும், அரசானது எந்தவொரு மதத்தையும் அரச மதமாக ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதும், ஜவகர்லால் நேரு அவர்களின் கொள்கையாக இருந்தது. சுருக்கமாகக் கூறுவதாயின், மதச்சார்பின்மையின் தத்துவவாதியாக அடையாளப்படுத்தப்படும் ஜவகர்லால் நேரு, மதச்சார்பின்மை என்பதனை மதத்தின் மீதான விரோதமாகக் கருதாத அதேவேளை, மதம் - அரசு என்பவற்றுக்கு இடையேயான முழுமையான பிரிவினையையும் ஆதரிக்காத ஒருவராகவே அடையாளங் காணமுடிகிறது. எனினும், மதச்சார்பற்ற அரசொன்று, சமூக சீர்திருத்தங்களைக் கொண்டுவர மத விடயங்களில் தலையிட முடியுமென்ற நிலைப்பாட்டினையும் நேரு கொண்டிருந்தமையினைக் காணலாம்.

மேற்கத்திய நவீனத்துவத்தின் வருகையானது, இந்திய சிந்தனையில் அதுவரை புறக்கணிக்கப்பட்ட மற்றும் ஒதுக்கப்பட்ட சமத்துவக் கருத்துகளை முன்னிலைக்குக் கொண்டுவந்தது. இது மதச்சார்பின்மை குறித்த யோசனைகளைக் கூர்மைப்படுத்தியதோடு சமூகத்தினுள்ளே சமத்துவம் பற்றிக் கவனங்கொள்வதற்கான ஒரு உந்துதலையும் ஏற்படுத்தியது. இது படிநிலையாக்கம் என்ற கருத்தை இல்லாமற்செய்து, சமூகங்களுக்கு இடையேயான சமத்துவம் பற்றிய கருத்தாடல்களை அறிமுகப்படுத்தியது. இவ்வாறு, இந்திய மதச்சார்பின்மை என்பது ஒரு தனித்துவமான வடிவத்தையெடுத்தது. மதரீதியான வேறுபாடுகளைக் கொண்ட ஒரு சமூகத்தில் ஏற்கனவே இருந்ததற்கும் மேற்கிலிருந்து வந்த கருத்துக்களுக்கும் இடையிலான தொடர்புகளின் விளைவாக மதச் சார்பின்மையென்ற விடயம் அமைந்தது. இது மதங்களுக்கு இடையேயான ஆதிக்கத்தில் சமமாகக் கவனம் செலுத்தியது. மேலும், இந்திய மதச்சார்பின்மை என்பது தனிநபர்களின் மதச்சுதந்திரத்தை மட்டுமன்றி சிறுபான்மை சமூகங்களின் மதச் சுதந்திரத்தையும் கையாள்கிறது. இவ்வகையில், கீழைத்தேய

நாடுகளில் மதச்சார்பின்மை என்பது மதத்தினை அல்லது மதங்களைக் கையாளுதல் என்பதனை மையப்படுத்தியதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.

எனினும், மதச்சார்பின்மையின் வடிவம் பிராந்திய வேறுபாடுகளைத் தாண்டி, ஆட்சியாளர்களின் நலன்களைப் பிரதிபலிக்கிறது. குறிப்பாக, 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் பின்னரைப் பகுதியிலும் ஆசியப் பிராந்தியத்தினுள் 'மதச் சார்பின்மை' தொடர்பாக முரணான பார்வைகளை அடையாளங் காணக்கூடியதாகவுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் முதற்பாதியில் துருக்கியில் நடைமுறைப்படுத்தப்பட்ட மதச்சார்பின்மையென்பது ஒழுங்கமைக்கப்பட்ட மதத்திலிருந்து விலகிச்செல்லும் இயல்பு கொண்டதொரு கொள்கையாக அன்றி, மத சம்பந்தமான செயல்களில் தலையிடுதல் மற்றும் மதத்தை அடக்குதல் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாகக் காணப்பட்டது. மதச்சார்பின்மையின் இந்த வரையறை முஸ்தபா கெமால் அட்டதுர்க் (Mustafa Kemal Atatürk) என்பவரால் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. முதலாம் உலகப் போருக்குப் பின்னரே அவர் துருக்கியின் ஆட்சிக்கு வந்தார். துருக்கியின் பொதுவாழ்வில் கலீபாவின் நிறுவனத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதில் அவர் உறுதியாக இருந்தார். பாரம்பரிய சிந்தனை மற்றும் வெளிப்பாடுகளிலிருந்து வெளியேறும் பட்சத்திலேயே துருக்கியை வருந்தத்தக்க நிலையிலிருந்து மீட்க முடியுமென அவர் உறுதியாக நம்பினார். துருக்கியை நவீனமயமாக்குவதற்கும் மதச்சார்பின்மைப்படுத்துவதற்கும் அவர் தீவிரமான முறையில் செயற்பட்டார். அட்டதுர்க் தனது சொந்தப் பெயரை முஸ்தபா கெமால் பாஷாவிலிருந்து கெமல் அட்டதுர்க் என்று மாற்றிக் கொண்டார். முஸ்லிம்கள் அணியும் பாரம்பரிய தொப்பியான பெஸ் தொப்பி சட்டத்தால் தடை செய்யப்பட்டது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் மேற்கத்திய ஆடைகள் ஊக்குவிக்கப்பட்டன. பாரம்பரிய துருக்கிய நாட்காட்டி கைவிடப் பட்டு, மேற்கத்திய நாட்காட்டி புழக்கத்துக்கு வந்தது. 1928இல் புதிய துருக்கிய எழுத்துகள் (மாற்றியமைக்கப்பட்ட லத்தீன் வடிவத்தில்) ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது முழுமையான மத நிராகரிப்பு அடிப்படையிலான மதச்சார்பின்மையாக அமைகின்றது.

இவ்வாறாக, மதச்சார்பின்மை தொடர்பாக முரணான புரிதலை கலாசாரங்களால் வேறுபடுகின்ற பிராந்தியங்களுக்கு இடையே அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஜவகர்லால் நேரு

அவர்கள் துருக்கி நாட்டு அட்டாதுர்க்கிலிருந்து மிகவும் வேறு பட்டவர். அரசிலிருந்து மதத்தினைப் பிரிப்பது முக்கியமல்ல. குறிப்பாக, கலாசார விழுமியங்களுக்கு அதிக முக்கியம் கொடுக்கும் அரசுகளில், அரசிலிருந்து மதத்தினை பிரிப்பது இலகுவானதொரு விடயமுமன்று. எனினும், அந்நாடுகளினது மதச்சார்பற்ற அரச கொள்கைகளானவை அமைதி, மத சுதந்திரம், மத சமத்துவம் போன்றனவற்றை மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கான தளத்தினை அமைத்துக் கொடுப்பனவாக இருக்கவேண்டும். இந்த நோக்கங்களையடைய எத்தனிக்கும்போது மத ஒடுக்குமுறை, பாகுபாடு மற்றும் விலக்கல் ஆகியன தொடர்பாகக் கடினமான கொள்கை முன்னெடுப்புக்களை மேற் கொள்ள வேண்டும். எனவே, மதம் - அரசு என்ற இந்த பிரிப்பு ஒருபோதும் ஒரு குறிப்பிட்ட வடிவத்தை எடுக்கவேண்டுமென்று பரிந்துரைக்க எந்தக் காரணமும் இல்லை. உண்மையில், பிரித்தலின் தன்மையும் அளவும் அது ஊக்குவிக்கும் குறிப்பிட்ட மதிப்புகள் மற்றும் இந்த மதிப்புகள் உச்சரிக்கப்படும் விதத்தைப் பொறுத்து அது வெவ்வேறு வடிவங்களை எடுக்கலாம். அதனையே நாம் மேற்கத்தேய மதச்சார்பின்மையிலிருந்து கீழைத்தேய மதச்சார்பின்மையின் வேறுபாட்டிலும் அட்டாதுர்க்கியின் மதச் சார்பின்மை நிலைப்பாட்டுக்கும் நேருவின் மதச்சார்பின்மை நிலைப்பாட்டுக்கும் இடையிலான வேறுபாட்டிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் மதச்சார்பின்மையும்

சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் 1898ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி மலேசியாவிலுள்ள ஈப்போ (Ipoh) நகரில் பிறந்தார். அவரது பிறப்பு மலேசியாவாக இருந்தாலும், வாழ்வும் கல்வியும் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தியே வளர்ந்தது. கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் தொடங்கினார். இடை நிலைக் கல்வியை முதலில் யாழ்ப்பாண சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் பின்னர் கல்கிசை சென் தோமஸ் கல்லூரியிலும் மேற்கொண்டார். 1918ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக் கழகத்தில் வெளிவாரி மாணவனாகக் கல்வி கற்று, விஞ்ஞான பட்டதாரியாக வெளியேறி, கல்கிசை சென். தோமஸ் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். தனது குடும்ப விடயமாக

விடுமுறை கோரியபோது மறுக்கப்பட்டதன் விளைவாக, பதவியை இராஜினாமா செய்து கல்லூரியை விட்டு வெளியேறியதாகத் தகவல்கள் உண்டு. பின்னாளில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சட்டம் பயின்று சிவில் சட்டத்துறையில் தனித்துவமான இடத்தை வகித்துவந்தார்.

செல்வாவின் அரசியல் ஈடுபாடு, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மூலம் 1947ஆம் ஆண்டு சாத்தியமானது. அதனையடுத்து, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்துடன் ஏற்பட்ட அரசியல் ரீதியான முரண்பாட்டினால் 1949இல் சமஷ்டிக் கட்சி எனும் தனியான கட்சியை ஆரம்பித்தார். அது இலங்கைத் தமிழரசுக் கட்சி எனவும் அழைக்கப்படுகிறது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு சமஷ்டி முறையே தீர்வென்ற அடிப்படையில், எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தமிழரசுக் கட்சியையும் அதன் கொள்கையையும் வரையறுத்துக் கொண்டார். அத்தகைய சமஷ்டியானது தெளிவான சுயாட்சியாக அமைய வேண்டுமென்ற இலக்கைத் தமிழ் மக்களிடமும் தென்னிலங்கை ஆட்சியாளரிடமும் முன்வைத்து பல போராட்டங்களை முன்னெடுத்தார். 1977ஆம் ஆண்டு அவர் மரணிக்கும் வரை, தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்களும் அத்தகைய சமஷ்டிக் கோரிக்கைக்குட்பட்டு சுயாட்சியை அடைவதற்கான நகர்வுகளை மேற்கொள்ள வழிவகுத்தார். அவர் தந்திரோபாயங்களை மாற்றிக்கொண்டாரேயன்றி மூலோபாயத்தை ஒருபோதும் மாற்றிக் கொண்டதாகத் தெரியவில்லை. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தென்னிலங்கை அரசாங்கத்தோடு எதிர்த்துப் போராடுவது, ஒத்துழைப்பது, உடன்படிக்கைகளை மேற்கொள்வது, இந்தியாவோடு கைகோர்ப்பதென பல்வேறு தந்திரோபாயங்களை தனது காலத்தில் மேற்கொண்டிருந்தார். ஆனால், ஒருபோதும் மூலோபாயத்தைக் கைவிடாது செயற்பட்டார். எனினும், இன்றைய தமிழ் அரசியல் தலைமைத்துவமானது மூலோபாயம் குறித்தும் தந்திரோபாயம் குறித்தும் ஒரு தெளிவான நிலைப்பாட்டினைக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர், கீழைத்தேசங்களில் பரவலடைந்த கிறிஸ்தவ சமயம் இலங்கையிலும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர் வருகையை அடுத்து தீவிரமாகப் பரவலடைய ஆரம்பித்தது. கத்தோலிக்க சமயத்தின் வளர்ச்சியில் புரட்டஸ்தாந்து, அங்கிலிக்கன் மற்றும் சபைகளது முக்கியத்துவம்

காணப்படுகிறது. அடிப்படையில் வடக்குப் பிராந்தியத்தில் சைவ சமயத்தவர்களாகக் காணப்பட்டோரே ஐரோப்பியர் வருகையின் பின்னர் கத்தோலிக்க மதத்தை ஏற்றுக்கொண்டவர்களாவர். சாதி அடிப்படையிலான அடக்குமுறையின் பிரதிபலிப்பே மத மாற்றத்திற்கு காரணமென விவாதங்கள் நிலவினாலும், ஐரோப்பியரது அழுத்தங்களும் அதனை நோக்கிய சலுகைகளும் தமிழரது மனோநிலையும் மத மாற்றத்துக்கு அடிப்படையாக இருந்ததெனக் கருத இடமுண்டு. இதற்கு வலுவான ஆதாரமாக உயர்சாதியினரும் மேல்தட்டு வர்க்கத்தினைச் சார்ந்தவர்களும் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றத் தொடங்கியமையைக் குறிப்பிடலாம். இதனை இரண்டு வகையாக சில ஆய்வாளர்கள் அடையாளப்படுத்துகின்றனர். அ) உயர்சாதி இந்துக்கள் கிறிஸ்தவ போதனைகள் பற்றிய அறிவைப்பெற்று அதனைத் தமது சமயநெறியாக ஏற்றுக் கொண்டமை (இது தனிநபர் நிலையில் நிகழ்ந்தது), ஆ) ஒரு குழுவாக மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியமை (ஒரு கிராமத்தில் ஒரு சாதிப்பிரிவினர் அல்லது உறவுக் குடும்பங்களின் குழு திரளாக ஒருங்கே மதம் மாறியமை) போன்றன நிகழ்ந்ததாக அடையாளப்படுத்தப்படுகின்றது. 1901ஆம் ஆண்டு இடம்பெற்ற கணிப்பீட்டின்படி, தமிழர்களில் 11.5 சத வீதமானவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தனர். வட மாகாணத்தில் மட்டும் 20 சதவீதத்தினர் கிறிஸ்தவர்களாகக் காணப்பட்டனர். இலங்கைத் தமிழ்ச் சமூகத்தினர் மத்தியில் சகல மட்டத்திலும் கிறிஸ்தவம் பரவியிருந்தது.

கிறிஸ்தவம், சைவசமயத்தினை விரோதப் போக்குடன் அணுகிய தன்மை 16ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரை நிலவியது. 18ஆம் நூற்றாண்டில், ஐரோப்பாவில் எழுச்சி பெற்ற அறிவொளி இயக்கங்களால் சகிப்புத்தன்மையும் தற்சார்பின்றி பிற பண்பாடுகளை நடுநிலைநின்று நோக்கும் பண்பும் வெளிப்பட்டது. இது சைவசமயத்தின் மரபை மீறாது அதீத முரண்பாடு கொள்ளாது கிறிஸ்தவம் இயங்க வழிவகுத்தது. 19ஆம் நூற்றாண்டில், அத்தகைய இயல்பு உயர்சாதிகளிடமும் உயர் வர்க்கத்திடமும் அதிகமாகக் காணப்பட்டது. கிறிஸ்தவர்களும் சைவசமயத்தவரும் ஒருசேர அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். தமிழ் - சிங்கள முரண்பாடு தோன்றியபோது, கிறிஸ்தவ மதமானது மொழியினது அடிப்படைக்குள்ளே நின்றுகொண்டு தனது போராட்ட உணர்வை வெளிப்படுத்தத் தயாரானது. சிங்களமொழியை மையப்படுத்தி தென்னிலங்கை

கிறிஸ்தவ மதம் இயங்கத்தொடங்கிய நிலையில், தமிழ்மொழியை மையப்படுத்தி வடக்கு, கிழக்கு பிராந்தியங்களில் கிறிஸ்தவம் செயற்பட்டதைக் காணமுடிகிறது.

தந்தை செல்வா ஒரு கிறிஸ்தவராக இருந்துகொண்டு, தமிழரது அரசியலில் தலைமை தாங்கியது மதச்சார்பின்மைக்கான வடிவமாகவே தெரிகின்றது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற கருத்தாக்கத்தைப் பயன்படுத்தினாலும் இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மக்களின் மதத் தனித்துவத்தை அல்லது அடையாளத்தை மறுதலிக்கவில்லை. தமிழரிடம் சாதியம் வேறுபட்டிருந்த அளவுக்கு, மதம் அரசியலில் ஆதிக்கம் செலுத்தவில்லையென்றே கூறமுடியும். சிங்கள - பௌத்தத் தேசியம் என்பது கிறிஸ்தவ எதிர்ப்புவாதத்துடனேயே தொடங்கியது. தமிழர் தேசியவாதமானது, தமிழ்மொழி மற்றும் வடக்கு, கிழக்கு பாரம்பரிய பிரதேசமென்ற அடிப்படையிலேயே எழுச்சி பெற்றது. அத்தகைய எழுச்சி சுயாட்சிக் கோரிக்கையுடன் ஆரம்பித்து தனிநாட்டுக்கான கோரிக்கைவரை சென்றது. சமஷ்டி முறைமையை தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக உலகம் முன்வைத்தது போல் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களும் தமிழருக்கான அரசியல் தீர்வு சமஷ்டியென்ற கருத்துநிலையைக் கொண்டிருந்தார். அதனை மையப்படுத்தியே தனது சமஷ்டிக் கட்சியையும் முன்மொழிந்தார். காலப்போக்கில் அதுவே தமிழரசுக் கட்சியாக விளங்கியது. அதன் திருமலைத் தீர்மானம் முதல் அனைத்து தீர்மானங்களிலும் தமிழரசுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் மதத்தினை முதன்மைப்படுத்தாத போக்கு நிலவியது. எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் சகல உரைகளிலும் சமஷ்டியை அடிப்படையாகக்கொண்ட 'தமிழ் பேசும் மாகாணம் சுயாட்சியை கொண்டிருத்தல் வேண்டும்' என்ற விடயம் பலமாக வலியுறுத்தப்பட்டது. இதனையே முதலாவது தீர்மானமாகத் தமிழரசுக்கட்சி முன்வைத்தது. இம்மாநாட்டில் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனமென கணிக்கப்பெறுவதற்கு அவர்களுக்குள்ள மறுக்கவியலாத உரித்துவத்தை எடுத்துரைத்து, அரசியல் சுயாதீனம் பெறுவதற்கு அவர்களுக்குள்ள உரிமையையும் சிங்களவர்களுடன் சமஷ்டி அமைப்பு முறையில் இணைவதற்கு அவர்களுக்குள்ள விருப்பையும் பிரகடனப்படுத்தியது.

காலப்போக்கில், தமிழரசுக் கட்சி மாவட்ட சபையையும் பிராந்திய சபைகளையும் அங்கீகரித்து செயற்பட்டமை அதன்

இன்னோர் பக்கமாகவுள்ளது. தமிழரசுக் கட்சி தற்போது வரை சமஷ்டிக் கோரிக்கையை கைவிட்டதாக இல்லையென்பதன் மூலம் அக்கட்சியின் மூலோபாயம் இன்னமும் மாற்றமடையவில்லை என்றே தெரிகிறது. ஆனால், அத்தகைய மூலோபாயத்தை முன்னெடுத்துச் செல்லும் தலைமைத்துவம் சார்ந்த வறுமையும் இயலாமையுமே நெருக்கடிக்கான மூலகாரணமாக உள்ளது. ஆனால், அடிப்படையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் இனத்தின் பாதுகாப்பு, மொழி, பிரதேசம் என்பன தமிழரின் அரசியல் வாழ்விலிருந்து விலகாதிருக்க வேண்டும் என்பதில் கவனங்கொண்டிருந்தார். தமிழரையும் சிங்கள வரையும் இருவேறு தேசியங்களாக அடையாளப்படுத்திய எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அதிலிருந்து தமிழர் விலகிச் செல்லாதிருக்கத் திட்டமிட்டாரென்பது கவனத்திற்குரியது. அவரது காலத்தில் கிறிஸ்தவத்தையோ சைவத்தையோ முதன்மைப்படுத்தாது இனத்தையும் அதன் உரிமையையும் விடுதலையையும் முதன்மைப்படுத்தியிருந்தார் என்பது இன்றைய தலைமுறை அரசியல் தலைமைத்துவத்துக்கு அவர் விட்டுச்சென்ற செய்தியாகும். கிறிஸ்தவர் மீதான ஓர் எதிர்ப்பு வாதத்தினூடாக தமிழர் தேசியவாதத்தை கட்டியெழுப்ப எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் முயலவில்லை. அதாவது, மதங்களினூடாக தமிழ்த் தேசியவாத்தினை கட்டியெழுப்பாத ஒரு அரசியலையே எஸ்.ஜே.வி. செல்வநாயகம் முன்னெடுத்திருந்தார்.

மிகப் பிரதானமானதாக, முஸ்லிம்கள் மீதான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் கொள்கையும் அணுகுமுறையும் தனித்துவமானது. வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் பூரண சுதந்திரம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதை 1949 ஆண்டு திருமலைத் தீர்மானத்தில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவர் தனது உரையில் முஸ்லிம்கள் வாழ்கின்ற பிரதேசங்கள் தமிழ்ப் பிரதேசங்களுடன் இணைந்திருக்க வேண்டுமா? அல்லது சிங்களம் பேசும் பிரதேசங்களுடன் இணைந்திருக்க வேண்டுமா? என்பதைத் தீர்மானிப்பதற்கு முஸ்லிம்களுக்கு பூரண சுதந்திரம் இருக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். அதுமட்டுமன்றி, வடக்கு, கிழக்கில் வாழும் சகல மக்களையும் உள்ளடக்கும் விதத்தில் 'தமிழ் பேசும் மக்கள்' என்ற வார்த்தைப் பிரயோகத்தை முதன்மைப் படுத்தும் கருத்தியலை முன்னிறுத்தியிருந்தார். இது ஒரு தனித்துவமான கருத்தியலாகக் காணப்படுகிறது. மதத்தை முதன்மைப்படுத்தாது மொழிவழித் தேசியத்தின் அடிப்படைகளை

ஆதாரமாகக்கொண்டு வடக்கு, கிழக்கிலுள்ள சகல மக்களையும் ஒன்றிணைக்கும் கருத்தியலாக அது அமைந்துள்ளது. அதன் அடிப்படைக்குள்ளேயே இஸ்லாமியர்களும் உள்ளடக்கப்படும் நியமம் ஒன்றின் வடிவம் தமிழ்த் தேசியத்தின் சுயத்தை அடையாளப்படுத்துகிறது. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தனது எல்லைக்குள் நியாயமான கருத்தியலை தமிழ்த் தேசியம் நோக்கிக் கட்டமைத்திருந்தார். தமிழரது சுயாட்சியானது, மதச்சார்பற்றது என்ற நியதியை வரைந்துகொள்வதில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் பங்கு முதன்மையானதாக அமைந்திருந்தது. அதனையே சமகாலத்திலும் தமிழர் கடைப்பிடிக்கவேண்டும் என்பதோடு, அதனைப் பின்பற்றும் செய்முறைகளை நிலைநிறுத்த முயலுதல் அவசியமானதாகும். செல்வநாயகம் அவர்கள் முன்னெடுத்த அரசியல் நிலைப்பாட்டின் அர்த்தங்களையோ நியாயங்களையோ புரிந்து கொள்ளாத அரசியல்வாதிகள் அத்தகைய கருத்தியலை வளர்த்தெடுக்காது விமர்சனத்தை மட்டுமே முதன்மைப்படுத்தியிருந்தனர். இதுவே பின்வந்த காலங்களில் தமிழ்த் தேசியவாத அரசியலில் முரண்பாடுகளும் பகைமைகளும் ஏற்பட அடிப்படையாக அமைந்தது. தமிழரசுக் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு திருமலையில் நடைபெற்ற போது முன்மொழிந்த பிரதான தீர்மானம் என்னவெனில், சுவிட்சர்லாந்து, கனடா, சோவியற் ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் நிறுவப்பட்டுள்ள சமஷ்டி அமைப்பு போன்று இலங்கையினது சமஷ்டி அமைப்பினுள்ளும் ஒரு சுயாதீனமான தமிழ் அரசினைக் கட்டமைத்தல் வேண்டும் என்ற முன்மொழிவினை அது வெளியிட்டது. அத்தோடு, அந்த சுயாதீனமான தமிழரசு மதச்சார்பு அற்றதாகவும் மொழிவாரியாக தமிழரசாகவும் இருத்தல் வேண்டும் எனவும் அது முன்மொழிந்தது. எனவே, தமிழரது சுயாட்சியில் மதச்சார்பின்மை நியதியை வரைந்து கொள்வதில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் பங்கு முதன்மையானதாக அமைந்திருந்தது. அதனையே சமகாலத்திலும் தமிழ் அரசியல் தலைமைத்துவம் கடைப்பிடிக்க வேண்டும்.

**முடிவுரை**

செல்வநாயகம் அவர்களின் தமிழர் அரசியலுக்கான பங்களிப்பு அதிக தனித்துவம் கொண்டதாகவே உள்ளது. அத்தகைய கருத்தியலில் சமஷ்டி, சுயாட்சி, மதச்சார்பின்மை, தமிழ் பேசும் மக்கள் போன்ற அம்சங்கள் முதன்மையான

கருத்தியலாக உள்ளன. அவற்றைத் தழுவியே தமிழர் தமது அரசியல் அபிலாசைகளை முன்னெடுக்கவேண்டிய சூழல் இன்று ஏற்பட்டுள்ளது. மதத்தின் பெயரால் அரசியல் முரண்பாடுகளை தமிழர் மத்தியில் ஏற்படுத்த முயலும் சக்திகள் தமது நலனுக்கு அமைவாகத் தமிழரைக் கையாள முனைகின்றனர். தமிழரது அரசியலானது மதச்சார்பின்மை அடிப்படையிலானது. அதன் வழியே தமிழரது இருப்பும் மாற்றங்களும் அமைவதோடு, அதுவே புரட்சிகரமான செய்முறையாகவுமுள்ளது. அதனை நோக்கியே தமிழர் இயங்கவேண்டும். அக ரீதியாக முரண்பாடுகளை ஏற்படுத்துவதைக் கைவிட்டு, பிணைப்பினையும் நெருக்கமான நட்பினையும் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். மத ரீதியாக முரண்பாடடைவதைக் கைவிட்டு, மத நல்லிணக்கத்தைக் கட்டி வளர்க்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதனையே எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் தமிழருக்காக விட்டுச் சென்றுள்ளார். அவரது தலைமையும் கொள்கையும் நடைமுறையும் மதச்சார்பற்ற தேசம் பற்றியதாகவே அமைந்திருந்தது. அதனை நோக்கி மீளவும் தமிழர்களின் செல்நெறி உருவாக்கப்பட வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


Cox H. (1965). *The secular city: Secularization and urbanization in theological perspective.* SCM Press: Germany.

Singh A.R. & Singh S.A. (2004) Gandhi on religion, faith and conversion: Secular blueprint relevant today. *Psychiatry, Science, Religion and Health*, 2(1),79-88.

Zuckerman P. & Shook J. R. (2017). *The Oxford handbook of secularism*. Oxford University Press: New York.